Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY தேசிய தினசரி

போன்: 389 தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம், சார்வரி பங்குனி 17 ஆம் நாள் ஷவ்வால் 12. (30-3-61) வியாழக்கிழமை இதழ் 41

உபதேர்தல் முடிவுகள்

சுதந்திரக்கட்சிக்கு 2

ஐக்கிய தேசியக் கட்சிக்கு 1

கொழும்பு புதன்

நேற்று புதன்கிழமை மாத்தளை, ரத்கமை, குருணாக்கலை இம்மூன்று தொகுதிகளுக்கும் நடைபெற்ற இடைத்தேர்தலுல் அரசாங்கக்கட்சி இருஸ்தானங்களையும், ஐக்கிய தேசியக்கட்சி ஒரு ஸ்தானத்தையும் பெற்றன. இதனுல் பழைய நிலைமையில் மாறுதல் எதுவுமில்லை.

மூன்று தொகுதிகளில் தேர்தல் அமைதிகவே நடைபெற்றது. தேர்தல் முடிவு விபரம் வருமாறு:-

மாத்தளை

திரு. அலிக் அலுவிகார (யூ. என். பி. 9687

திரு. டி. டி. குணரத்ன (ல. சு. க.) 8020

திரு. டக்ளஸ் சேனநாயக்கா (யு. ஸி. பி.) 113

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த அலிக் அலுவிகாரா 1667 அதிகப்படி வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டார்.

சென்ற ஜூலை மாதம் நடந்த தேர்தலில் யு. என். பி. அபேட்சகருக்கு 8961 வாக்குகள் கிடைத்தன. சுதந்திரக் கட்சி அபேட்சகர் 7489 வாக்குகள் பெற்றார்.

ரத்கமை

திரு. டி. ஈ. திலகரத்ன (ல. சு. க.) 10061

திரு. என். வைத்தியரத்ன (யு. என்..பி.) 9646

திரு. எம். ஜி. மெண்டிஸ் (கம்யூ.) 6816

திரு. கே. ஜே. டி. சில்வா (எம். ஈ. பி.) 512

415 அதிகப்படி வாக்குகளால் லங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த டி. ஈ. திலகரத்ன வெற்றி பெற்றார்.

சென்ற ஜூலை மாதத் தேர்தலில் ல. சு. கட்சிக்கு 11583 வாக்குகளும், யு. என். பி.க்கு 9390 வாக்குகளும், எம். ஈ. பி.க்கு 2390 வாக்குகளும் கிடைத்தன.

(5-ம் பக்கம் பார்க்க)

'பட்டினி - ராணுவத்துக்கு தமிழ் மக்கள் பணியமாட்டார்கள் இறுதிவரை போராட்டம் நடத்த உறுதிகொண்டுள்ளோம்'

—திரு. வி. நவரத்னம்

தமிழரசுக்கட்சிப் பொதுக் காரியதரிசி திரு. வி. நவரத்னம் சத்தியாக்கிரகம் பற்றி நேற்றுப் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் பின்வருமாறு கூறியிருக்கிறார்:

"இன்றுடன் சத்தியாக்கிரகம் ஆரம்பித்து 39 நாட்களாவதால் அதன் தற்போதைய நிலை பற்றி ஆராய்வது பொருத்தமுடையதாயிருக்கும் என நம்புகிறேன்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள 5 கச்சேரிகளிலும் பெரும்பாலான அரசாங்க இலாகாக்களிலும் வேலைகள் நடைபெறவில்லை. இயக்கம் ஆரம்பித்தது முதல் அவைகள் மூடப்பட்டுள்ளன.

குறித்த இருமாகாணங்களும் இலங்கையில் மூன்றிலொரு பகுதி பிரதேசமாகும். இப்பகுதியில் அரசாங்கம் நடைபெறவில்லை என்பதைப் பிரதமரே ஒப்புக்கொண்டிருக்கிறார்.

இது விசித்திரமான நிலையாகும். சிவில் நிர்வாகமோ, ராணுவ நிர்வாகமோ அங்கு இல்லை. ஆயினும் அமைதிநிலவுகிறது. 95 சத விகிதத்துக்கு மேற்பட்ட தமிழ்மக்கள் தங்களின் மத்தியில் ஏராளமான சிங்களவர்கள் இருக்கும் நிலையில் பாராட்டத்தக்க விதத்தில் செயலாற்றி வருகிறார்கள்.

கொழும்பில் நடைபெற்று வரும் "சகல சிங்கள அரசாங்கம்" பயமுறுத்தலைக் கொண்ட சிவில் சர்வீஸ் முறையான அறிக்கைகள் விடுவதைத்தவிர இவ்விஷயத்தில் வேறுசிரத்தை எடுத்துக்கொண்டதாய் தெரியவில்லை.

விட்டுக்கொடுப்பதற்கு அரசாங்கம் தயாராய் இல்லை என்றுகூறினுல், தமிழ்மக்களும் சரணுகதி அடைய முடியாது என்பதில் ஏகோபித்த உறுதியுடனிருக்கிறார்கள்.

ஒரு ஜனநாயக நாட்டில் ஆளப்படுவோரின் சம்மதமின்றி எந்த அரசாங்கமும் ஆளமுடியாது. அதைப் பல தடவை எடுத்துக்காட்டியுள்ளோம். எவ்விதக் கஷ்டத்திலும், தியாகத்திலும் நீண்ட காலப் போராட்டத்துக்கு மக்கள் தயாராய் இருக்கிறார்கள்.

எங்கள் மொழி, எங்கள் ஒப்பற்ற பாரம்பரியம், கலாச்சாரம், தமிழர்களாகவும், தமிழ்ப் பேசும் மக்களாகவும் வாழ்வதற்கான எங்கள் உரிமை, எங்கள் குழந்தைகளுக்கு என்னவித கல்வி அளிக்கவேண்டுமென்று தீர்மானிக்கும் உரிமை, இந்நாட்டில் சமஅந்தஸ்துள்ள பிரஜையாக இருக்கும் உரிமை பார்லிமெண்டுக்கு எங்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்

(5-ம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணக் கச்சேரி முன் "வெடிகுண்டு"

யாழ்ப்பாணம், வியாழன் நேற்றிரவு சுமார் 12-50 மணிக்கு யாழ்ப்பாண கச்சேரிமுன் கீழ்க் கோடியிலுள்ள வாசல்பக்கம் ஒரு வெடி பலத்த சத்தத்துடன் வெடித்துபுகை கிளம்பியது. ஒருவருக்கும் சேதமில்லை. இந்த வெடி உள்ளிருந்து வீசப்பட்டதாகக் கூறப்படுகிறது. உடனே பொலிசார்வந்து பார்த்து இருவரை அங்கு காவலுக்குப்போட்டனர். அதற்கு முன் சில கற்கள் விழுந்தன. டாக்டர் நாகநாதன், திரு. அமிர்தலிங்கம், திரு. தர்மலிங்கம் இவர்கள் பொலிசாரிடம் புகார் தெரிவித்தனர்.

'மொழி உரிமைமறுப்பது மனிதத்தன்மையல்ல'

மன்னுர் புத்தபிக்கு அறிக்கை

மன்னுரிலுள்ள சுவர்ணபிம்பராமய விகாரையைச் சேர்ந்த வண. கட்டுகுலுவ ஜினரத்ன தேரோ, பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள ஒரு செய்தியில் கூறுவதாவது:-

"ஒவ்வொருவருக்கும் தமது மொழியை எவ்விதத்தடையுமின்றிபயன்படுத்த சுதந்திரமிருக்கவேண்டும். சிங்களம் அரசாங்கமொழியாக இருப்பதில் தமிழருக்கு ஆட்சேபமில்லை. ஆகவே தமிழுக்குசரியான இடம் அளிக்க வேண்டியது சிங்களவராகிய நமது கடமையாகும்"

தமிழரும் முஸ்லிம்களும் சத்தியாக்கிரகம் செய்யும் கச்சேரி அடிக்கு தேரோ சென்று வெளியிட்ட மேற்குறித்த அறிக்கையில் அவர் மேலும் கூறுவதாவது:-

இந்நாட்டுக்கு சுதந்திரம் பெறுவதில் ஆரம்பமுதல் நம்முடன் தோளோடு தோள்நின்று இலங்கைத் தமிழர் ஒத்துழைத்தார்கள் என்பதை நான் மீண்டும் சொல்ல வேண்டியதில்லை. ஆகவே, சுதந்திரத்தின் பயனை அனுபவிக்க எல்லாருக்கும் உரிமையுண்டு. தமிழருக்கு இந்த உரிமையை மறுப்பது மனிதத்தன்மையற்றது. மொழி விஷயத்தில் மட்டுமன்றி எல்லா விதத்திலும், எல்லா இலங்கையரும் சுதந்திரமுள்ளவர்களென்பதே என் கருத்து. சரியான வழியைப்பின்பற்றி இப்பிரச்சினையை சமுகமாகத் தீர்க்குமாறு எல்லாத் தலைவர்களையும் நான் வேண்டுகின்றேன்."

பங்கீட்டரிசிப் பிரச்சினையில் மேற்றிராணியார் தலையீடு

இரு அமைச்சுகளின் அறிக்கைதரும் தகவல்

கொழும்பு, புதன்

பங்கீட்டரிசிக்கான அனுமதிப்பத்திரங்களை அரசாங்க அதிபரின் இல்லத்துக்குச் சென்று பெற்றுக்கொள்வதற்கு கூட்டுறவுச் சமாஜப் பிரதிநிதிகளை அனுமதிப்பதற்கு தமிழரசுக் கட்சித் தலைவர்களைச் சந்தித்து யாழ்ப்பாண மேற்றிராணியாரும் சங்.டாக்டர் நைல்ஸும் முயற்சி செய்வார்களென்றுபாதுகாப்புவெளிவிவகார அமைச்சும், உள்நாட்டு கலாசார அமைச்சும் கூட்டாக வெளியிட்ட அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கை பின்வருமாறு கூறுகிறது:-

யாழ்ப்பாணம், வவனியா' மன்னுர், திருக்கோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் பொதுவாக நிலைமையில் மாற்றமில்லை.

பங்கீட்டரிசி விநியோக நிலைமை பற்றி யாழ்ப்பாணத்திலுள்ள அதிகாரிகளுடன் யாழ்ப்பாண மேற்றிராணியாரும் சங். டாக்டர் நைல்ஸும் பேச்சுவார்த்தை நடத்தினுர்கள். தமிழரசுக் கட்சித் தலைவர்களைச் சந்தித்துப் பேசுவதற்கு மேற்றிராணியார் ஒப்புக்கொண்டுள்ளார். அரசாங்க அதிபர் வாசஸ்தலத்திலிருந்து பங்கீட்டரிசி, கோதுமை மாவு ஆகியவற்றுக்கான அனுமதிச் சீட்டுக்கள் வழங்குவதற்கான ஒழுங்குகளைச் செய்வதில் இவர் தலையிடுவார். அரசாங்க அதிபரின் வாசஸ்தலத்துக்குச் செல்லும் வழியில் மறியல் செய்யப்படுவதை நிறுத்திக்கொள்வதற்கு தமிழரசுக் கட்சித் தலைவர்களைத் தூண்டுவதில் மேற்றிராணியார் வெற்றி பெற்ருல்,

(5-ம் பக்கம் பார்க்க)

மௌனபிரார்த்தனையில் சிப்பாய்கள் கூச்சல்

அரசாங்க அதிபரிடம் ஆட்சேபம்

யாழ்ப்பாணம், வியாழன்

நேற்றுமாலை ஆறுமணிக்கு, பிரார்த்தனைச் சமயம் என்பதை அறிவிக்கும் மணிஅடித்ததும் சத்தியாக்கிரகிகள் எழுந்து நின்றனர். எங்கும் நிசப்தம் நிலவியது. ஆனுல் திடீரென்று கச்சேரி பழைய பூங்கா மைதானத்தில் முகாமிட்டுள்ள இராணுவ வீரர் சிலர், மத்தளம் அடித்து, குழல் ஊதி, பாட்டுப் பாடி இரைச்சலுண்டாக்கினர். அங்குள்ள இராணுவ லொறிகளின் 'ஹார்ன்'களையும் அடித்து அவர்கள் இரைச்சலை அதிகப்படுத்தினர்.

பொலிசிடம் எம். பி. புகார்

இராணுவ சிப்பாய்களின் இந்த நடவடிக்கை குறித்து கச்சேரிக்குள் கடமையாற்றிக் கொண்டிருந்த பொலிஸ் அதிகாரியிடம் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தி

(5-ம் பக்கம் பார்க்க)

வண்ணை சிவாலய ரதோற்சவம்

இன்று வண்ணை சிவன் கோவில் ரதம். பகல் 11-30 மணிக்கு பூஜை. 1 மணிக்கு பஞ்சமூர்த்திகளும் தேரில் எழுந்தருளி காட்சியளிக்கிறார்கள்.

மணிவாக்கு

நமது பிரார்த்தனை நமது இதய பரிசோதனையாகும். இறைவனின் ஆதரவில்லாவிட்டால், நமக்கு வேறு துணையில்லை என்பதை நமக்கு நினைவூட்டுகிறது.
— காந்திஜி

ஈழநாடு
EELA NADU

யாழ்ப்பாணம் சார்வரி ஆண்டு பங்குனி மீ 17 உ (30-3-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389.

தேசிய நெருக்கடி

அரசாங்கம் மூன்றரைக் கோடி ரூபாய் கடன் வேண்டுமென்றும் நாலரை வீதம் வட்டி தருவதாயும் சென்ற பெப்ரவரி மாதம் 20-ந் திகதி முன் வந்தது. அந்தத் தொகை மார்ச்சு 28-ந் திகதி திங்கட்கிழமை சேர்ந்ததால், கடன் பத்திர விற்பனை அத்துடன் முடிந்ததாக இலங்கை மத்திய வங்கியின் அறிக்கை தெரிவிக்கிறது. நாலரை வீதம் என்பது குறைவான வட்டியல்ல. அதிகமென்றே கூறவேண்டும். அப்படியிருந்தும் மூன்றரைக் கோடி ரூபாய் கடன் வசூலாக ஐந்து வாரங்களாகியுள்ளன. இது குறித்து அரசாங்கம் பெருமையோ, நிம்மதியோ அடைவதற்கில்லை.

நிதி நிலைமை மிக மோசமாக இருக்கிறதென்று, மந்திரிசபையைச் சேர்ந்த ஒருவரே பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார். அப்படியிருக்கையில் அரசாங்க சிப்பந்திகளுக்கு வருடத்தில்மொத்தம் நாலரைக் கோடி ரூபாய் சம்பள உயர்வு அளிக்க வேண்டுமென்று சம்பளக் கமிஷன் சிபார்சு செய்துள்ளது. ஏற்கெனவே அரசாங்க சிப்பந்திகளுக்கு சம்பளம் கொடுக்க, வருமானத்தில் பாதிக்கு மேலாகின்றது. இன்னும் இச் செலவைக் கூட்டிக்கொண்டுபோவதாயின் அதை அரசாங்கத்தால் சமாளிப்பது சுலபமன்று.

சம்பளக் கமிஷன் செய்துள்ள சிபார்சின்படி, தன் சிப்பந்திகளுக்கு சம்பளத்தைக் கூட்டாவிடில், சிப்பந்திகளிடையே அதிக அதிருப்தியும் மனக் கசப்பும் ஏற்படும். ஏற்கெனவே இந்தக் கமிஷன் மூலம் 4 வருட தாமதம் ஏற்பட்டுவிட்டதாகப் புகார் கிளம்பியுள்ளது. கமிஷன் அறிக்கையை அரசாங்கம் பரிசீலனை செய்து வருவதாகச் சொல்லப்படுகிறது. இது குறித்து அரசாங்கம் அதிகம் தாமதம் செய்ய முடியாது. இது தர்ம சங்கடமான நிலைமை.

போதாக்குறைக்கு நாட்டில் அரசியல் அமைதியில்லாததால், செலவுகள் அதிகரிக்கின்றன. அபிவிருத்தி வேலைகள் நடைபெறவும் முடியாதிருக்கிறது. இதையெல்லாம் உணர்ந்து, அரசாங்கம் முதலில் அமைதியை ஏற்படுத்த வேண்டும். பிறகு பொருளாதார முன்னேற்றத்திற்கு வழி செய்ய வேண்டும். இன்றைய நிலையில் அரசாங்கக் கட்சியால் மட்டும் இப் பொறுப்பை நிறைவேற்ற முடியாது. எல்லாக் கட்சிகளுமுள்ளிட்டு பொது மக்களின் ஒத்துழைப்பிருந்தால் தான் இது முடியும். அதற்கான வகையில் அரசாங்கக் கட்சி, காரியங்கள் செய்ய முற்பட்டாலே இன்று எழுந்துள்ள இப் பெரிய தேசிய நெருக்கடியை வெற்றிகரமாகத் தீர்க்க முடியும்.

—

மனமுண்டானால் மார்க்கமுண்டு

யாழ்ப்பாண மாவட்டத்தில் பெரும்பாலோர் சென்ற இரண்டு வாரங்களாகப் பங்கீட்டு அரிசியைப் பெறவில்லை என்றும், சமஷ்டிக் கட்சியின் நடவடிக்கையின் பயனாக அம்மக்களுக்கு பாரதூரமான சங்கடங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு, உள்நாட்டு அமைச்சின் கூட்டு அறிக்கை தெரிவிக்கின்றது. க்ஷயநோயாளர் தர்மப் பணம், அனாதைகள் உதவிப்பணம் இவற்றை, அரசாங்க அதிபர் வாசல்முன் மறியல் நடப்பது காரணமாக விநியோகிக்க முடியவில்லை என்றும் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர். பாரதூரமான சங்கடங்கள் ஏற்பட்டதை உணர்ந்தும், அரசாங்கம் ஒன்றும் செய்யாதது விபரீதம்.

பொது மக்களுக்கு உணவு அளிக்கவேண்டியதும் உதவிப் பணம் அளிக்கவேண்டியதும் அரசாங்கத்தின் முதல் கடமை. அக்கடமையை அரசாங்கம் ஏன் நிறைவேற்றவில்லை என்பதே கேள்வி. சமஷ்டிக் கட்சியினர்மீதோ, மறியல்காரர்கள் மீதோ புகார் கூறுவதுடன் அரசாங்கம் தன் பொறுப்பைக் கழித்துக்கட்ட முடியாது. பொது மக்கள்மீது அரசாங்கத்துக்கு உண்மையில் அக்கறையிருப்பின், இனி ஒரு கணமேனும் தாமதியாது, அரிசி விநியோகத்துக்கும், உதவிப் பணம் அளிப்பதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும். மனமுண்டானால் நிச்சயம் மார்க்கமுண்டு.

பொது மக்களுக்கு அரிசியும் உதவிப் பணமும் வழங்கப்படவேண்டுமென்பதில் அரசாங்கத்துக்கு எவ்வளவு கவலை உண்டோ, அவ்வளவு தமிழரசுக் கட்சி உள்ளிட்டு,சத்தியாக்கிரகிகள் அனைவருக்கும் உண்டு. பொதுமக்களுக்கு இன்னல் விளைவிக்கவேண்டுமென்ற எண்ணம் அவர்களுக்கு இல்லை என்பது,திருக்கோணமலை, மட்டக்களப்பு இவ்விடங்களில் அரிசி, உதவிப் பண விநியோகத்தை அவர்கள் தடுக்காததிலிருந்து விளங்கும். இருசார்பினரும் பொது மக்களுக்கு வீண் சங்கடம் கூடாதென்று உணர்வதால், இருசார்பினரும் கூடிப் பேசினால், தப்பெண்ணங்கள் நீங்கி பொது மக்களுக்கு உணவும், உதவிப் பணமும் இன்னும் தவக்கமில்லாமல் கிடைக்க வழி பிறக்கும். இதில் அரசாங்கமே முதல் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழரின் கோரிக்கை நியாயமானது!

சத்தியாக்கிரகத்தையும், தமிழரின் மொழிக் கொள்கையையும் ஆதரித்துப் பேராதனைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த வண. லக்ஷ்மண் விக்கிரமசிங்கி, ஈ. ஆர். சரத்சந்திரா, ஜி. ஒபயசேகரா, வி. ஈ. ஏ. விக்கிரமநாயக்க, அயன் குணத்திலக ஆகியோர் வெளியிட்டிருக்கும் கடிதச் சுருக்கம்.

சிங்களம்மட்டும் சட்டத்தால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்களைத் தீர்ப்பதற்குத் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் போதியளவு கவனம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

இன்றைய அரசாங்கம், நிலைமையைச் சமாளிப்பதற்கு இராஜதந்திரத்துடன் நடந்துகொண்டால்மட்டும் போதாது. தார்மீக முறைக்கும் அது உகந்ததாக இருக்கவேண்டும்.

சத்தியாக்கிரகத்தில் தமிழரசுக் கட்சியினர் இறங்கியது சரியானதா, தவறானதா என்ற கேள்வி இன்று எழுந்துள்ளது. சட்டபூர்வமாக ஆட்சி செய்துவரும் ஓர் அரசாங்கத்தை எதிர்த்துத் தமிழரசுக் கட்சி சத்தியாக்கிரகத்தை ஆரம்பித்துள்ள செயலானது நாட்டின் சட்டதிட்டங்களைத் தகர்ப்பதாகும் என்பது ஒரு சாரார் கருத்து.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அரசாங்க அலுவல்கள் நடைபெறாமற் செய்திருப்பது இச்சத்தியாக்கிரக இயக்கம் தான் என்பது அவர்கள் சுமத்தும் குற்றச்சாட்டாகும்.

கட்சிச் சார்பற்றவர்களும் அரசாங்க அதிகாரிகளும், சத்தியாக்கிரகம் மிக அமைதியாகவும் பலாத்காரம் எதுவுமின்றியும் நடைபெற்றுவருவதாகத் தெரிவித்துள்ளனர். சத்தியாக்கிரகம்பற்றி காந்திஜி கூறியிருப்பது இங்கு பொருத்தமானது. அது வருமாறு: "சத்தியாக்கிரகம் என்ற சொல் தென்னாபிரிக்காவில் என்னால் புதிதாகப் புனையப் பெற்றது. இச் 'சக்தி'யை அவர்கள் அங்கு எட்டு வருஷம் கையாண்டனர். அநீதியான சட்டங்களை எதிர்ப்பதற்கு அரசியல் துறையில் இது கையாளப்பெற்றது. அநீதிக்குக் கட்டுப்பட்டு ஒழுக விரும்பாத ஒருவர் அந்த அநீதிக்காகத் தம்மை தண்டனைக்குள்ளாக்குகின்றார்.

"சமூகத்தின் நலனைக் கருதியே நாட்டின் சட்ட திட்டங்களுக்கு ஒருவர் பணிந்து வருகின்றார். ஆனால் சில சட்டங்கள் அநீதியானவையாக இருப்பதைக்கண்டு அவற்றை எதிர்க்கவேண்டிய நிலை ஏற்படுகின்றது. இத்தகைய சட்டங்கள் தமது கௌரவத்துக்குப் பங்கம் விளைக்கின்றதெனவும் அவர் எண்ணுகின்றார். ஆகவே, அவர் அச்சட்டத்தை மீறி அதற்குரிய தண்டனையைத் தாமே அனுபவிக்கின்றார். அரசினரின் செயல்கள் அநீதியானதென்பதை உணர்த்துவதற்காக அவர் ஒத்துழையாமை இயக்கத்தை மேற்கொள்ளலாம்".

எனவே, தமிழரசுக்கட்சியினர் மேற்கொண்டுள்ள சத்தியாக்கிரக இயக்கம் தவறெனக் கூறுபவர்களுக்கு காந்திஜியின் விளக்கம் தகுந்த பதில் அளிப்பதுடன் சத்தியாக்கிரகிகள் தவறுசெய்யவில்லையென்பதையும் நன்கு எடுத்துக்காட்டுகின்றது. இது விஷயத்தில் சத்தியாக்கிரக இயக்கத்தின் பிதாவாகிய காந்திஜியின் கூற்றை நாம் முற்று முழுதாக ஏற்றுக் கொள்கின்றோம்.

மொழி சம்பந்தமாக அரசாங்கம் நடந்துகொண்டது சரியெனக் கூறுவது பற்றி இனிக் கவனிப்போம். மொழியுரிமை மறுக்கப்பட்டிருப்பதற்காகவே சத்தியாக்கிரக இயக்கம் ஆரம்பிக்கப்பெற்றதெனச் சத்தியாக்கிரகிகள் மீது குறைகாண்போர் கூறுகின்றனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருப்பவர்கள் தங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள நிர்வாக முறைச் சட்டங்களைத் தனிப்பட்ட சில சலுகைகளாகவே கருதுகின்றனர். தவிர இந்நாட்டில் அவர்களும் தேசிய சிறுபான்மைச் சமூகத்தினர் என்றஉரிமையையும் அது தடுத்து நிறுத்தி இருக்கின்றதென அவர்கள் கருதுகின்றனர். அரசினரின் செயல்களையும் அவர்களின் நோக்கங்களையும் கண்டிக்கும் தோரணையில் இந்தச் சத்தியாத்கிரக இயக்கம் பெருமளவில் நடைபெற்று வருகின்றதென்பது எங்கள் கருத்து.

அரசாங்கத்தின் நிர்வாக முறை மொழிப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குச் சிலர் கருதுவதுபோல முதற்படியாக அமையவேமாட்டாது. உண்மையைக் கூறப்போனால் தமிழினத்துக்கு அளிக்கப்பட்ட உரிமைகள் மிகக்குறைவானவை. சமீபத்தில் நிறைவேற்றப்பட்ட சில சட்டங்கள் தமிழர் தேசிய சிறுபான்மை இனத்தினர் என்பதையே மறுத்துவிட்டன. இந்த அழகில் இன்றைய அரசாங்கம் தமிழினத்துக்கு ஏதோ அள்ளிக் கொடுக்கப்போகின்றதென்று எண்ணுவதற்கே இடமில்லை.

பின்லந்தில் சுவீடிஷ் மக்கள் 9 சத விகிதத்தினரே. அப்படியிருந்தும் அவர்கள் தேசிய சிறுபான்மை இனத்தினராகக் கணிக்கப்படுகின்றனர். சுவிற்சர்லாந்தில் இத்தாலியர் 6 சதவிகிதத்தினர். அவர்களுக்குக்கூட மொழியுரிமை தாராளமாகவழங்கப்பட்டுள்ளது. அங்கு ரோமான்ஷ் மொழியும் தேசிய மொழி என்ற அந்தஸ்தைப் பெற்றிருக்கின்றது.

இலங்கையின் முழு ஜனத்தொகையில் பத்து விகிதத்தினர் தமிழ்மக்கள். பல மொழிகள் உள்ள நாடுகளில் எவ்வாறு ஒவ்வொரு மொழிக்கும் அவற்றுக்கான உரிமைகள் அளிக்கப்படுகின்றனவோ, அவ்வாறே தமக்கும் அளிக்க வேண்டுமென்பது அவர்களின் நேர்மையான கோரிக்கை. இந்த அடிப்படையில் இப்போதுள்ள சட்டங்களால் ஏற்பட்டுள்ள கஷ்டங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்க முடியாது. இச்சட்டங்களிலுள்ள சில பகுதிகள் அநீதியானவை என்பதையே நாம் எடுத்துக் காட்டிக் கொண்டிருக்க வேண்டும்.

பெரும்பான்மை மக்களில் தேசிய மொழியின் மதிப்புக்குப் பங்கம் ஏற்படாத வகையில், தேசிய சிறுபான்மை இனத்தினரின் மொழிக்குச் சகல உரிமைகளையும் அளிப்பதே உண்மையான தேசியமாகும்.

ஐயாறன் எழுதுவது

பெங்களூரிலிருந்து ஒரு நண்பர் வந்தார். யாழ்ப்பாணத்தில் நடக்கும் சத்தியாக்கிரகத்தைப் பார்த்தார். இதேமாதிரி கிளர்ச்சிகள், இந்தியாவில் இப்போதும், மகாராஷ்டிர எல்லை நிர்ணயத்துக்காக நடப்பதாயும், பல வர்த்தகர்கள் அரசாங்கத்துக்கு வரிகளே கொடுக்க மறுப்பதாயும், அங்கு பலாத்காரம்கூட தலைதூக்குவதாயும், ஆனால் இங்கு இலங்கையிலே சத்தியாக்கிரகம் அமைதியாக, பக்தியாக நடப்பதைக் கண்டு தாம் வியப்படைவதாகவும் கூறி பாராட்டினார்.

பிரதமர் சிறிமாவுக்கு இது அர்ப்பணம்.

∴ ∴ ∴

இன்று யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி, கொழும்பிலும் தேர்த்திருவிழா நடைபெறுகிறது. வண்ணார்பண்ணை சிவன் கோவிலிலும், கொழும்பு பொன்னம்பலவாணேசர் கோவிலிலும் ரதோற்சவம். வெகு தூரத்திலிருந்து மக்கள் குழந்தை குட்டிகளுடன் வந்து ஓடும் தேரிலுள்ள ஆண்டவனை பக்தியுடன் தரிசித்து அருட் பிரசாதம் பெற்றுச் செல்லுவர்.

∴ ∴ ∴

சில வருடங்களுக்கு முன்னால் கொழும்பிலே சுவர்களில் "ஆடிவேல் ஒழிக", "தீபாவளி ஒழிக," "நாற்பது ராத்தல்உருவத்துக்கு நாலாயிரம் ராத்தல் தேர் எதற்கு?" இன்னும் இது போல் சில வசனங்கள் எழுதியிருந்ததைப் பார்த்திருக்கிறேன். சமீப வருஷங்களில் இந்த "ஒழிக" வசனங்களைக் காணவில்லை. இதற்குப் பதில் ஆடிவேலும், தீபாவளியும், தேர்த்திருவிழாவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

என்றாலும் தேர்த்திருவிழா எதற்கு நடக்கிறது? அதன் நோக்கமும் தத்துவமும் என்ன? என்ற கேள்விக்கான பதிலை தெளிவாகத் தெரிந்து கொள்ள முடியவில்லை. சமய சம்பந்தமான கேள்விகளுக்கு, இக்காலத்திலே நமக்குத்தெளிவாக விளக்கம் கூறக்கூடியவர்கள் யார் இருக்கிறார்கள்?

∴ ∴ ∴

தற்செயலாக அச்சுவேலி சிவஸ்ரீ குமாரசுவாமிக் குருக்கள் பாராட்டு விழா மலரைப் பார்த்தேன். அதில் "சைவ சிவாசாரிய திலகம்" என்ற தலைப்புடனே குல. சபாநாதன் அவர்கள் எழுதியுள்ள கட்டுரையில், "இளைஞர் உள்ளத்திலே இக்காலத்தில் ஏன்? எப்படி? என்று கேள்விகள் எழுகின்றன. இக்கேள்விகளுக்கு தகுந்த விடையளித்து சமாதானம் கூறக்கூடியவர் இலங்கையிலே ஒரே ஒருவர் தான் இருக்கிறார். அவர்தான் அச்சுவேலிக் குருக்களாவார்கள் என்பதுபற்றி கருத்து வேற்றுமைக்கே இடமில்லை" என்று கூறிவிட்டு, இரதோற்சவத்தின் தத்துவார்த்தத்தைப்பற்றி குருக்களவர்கள், நயினாதீவு நாகபூஷணி அம்மன் தேர்த் திருப்பணிச் சபை மலரில் விளக்கியுள்ளதை எடுத்துக் கூறுகின்றார்.

"தேர்வடிவம் நமது உடலைக் குறிப்பதாகும். அதில் காணப்படும் நான்கு சிங்கங்கள் ஆன்மாவின் ஜீவகாருண்யமில்லாத லோப குணத்தையும், பிரபஞ்ச ஆசை, அகங்காரம், விபரீத உணர்வு இவற்றையும் குறிக்கும். எட்டு யாளிகள் ஆன்மாவின் அஞ்ஞானம் முதலிய எட்டு அவத்தைகளைக் குறிக்கும். கொடிகள் தத்துவங்களைக் குறிக்கும்.... குஞ்சங்கள், வாகுமாலை—ஆன்மாக்கள் மனச் சலனத்தினால் எழுவகைப் பிறப்பிலே எண்பத்து நான்கு லட்சம் யோனிபேதங்களாக மாறிமாறி அடையும் அவத்தையைக் குறிக்கும். உடம்பு முதலிய இவைகளெல்லாம் ஆன்மா வெறுத்து தியானத்தால் திருவருளைச் சேர்ந்திருக்கும் உண்மைக்கு அறிகுறியாகவும், இரதோற்சவம் ஆலயங்களில் நடைபெறுவதாகுமென அறிஞர் கூறுவர்... இவ்வாறு உண்மைப் பொருள் காண்பித்து நிற்கும் மிக்க மகத்துவமுடைய இரதோற்சவம்' என்றும், "பசுபதியாகிய சிவபெருமான் சூரிய சந்திரர்களை உருள்களாகவும் நான்கு வேதங்களை குதிரைகளாவும் கொண்ட தேரில் உமாதேவியருடன் சென்று, அத்தேவியாரை நோக்கித் திருப்புன்முறுவல் செய்தமாத்திரத்தே, அம்முறுவலின் அக்கினியினால் முப்புரமும் நீறாயின. சிவபக்தி வழுவாதிருந்த மூவரை அடிமைகொண்டு தம் பதமளித்ததை இரதாரோகணக் காட்சி உணர்த்துகின்றது. முப்புரமென்பது ஆணவம், கன்மம், மாயை. மூவரை அடிமைகொண்டது, ஆன்மாக்களை இரக்ஷிக்கும் முறையை உணர்த்தியது. திரிபுரசங்காரத்தின் உண்மைக் காட்சியை உணர்த்தி, ஆன்மாக்களை பந்தித்த மும்மலங்களையும், நீக்கியருளும் குறிப்பாகவே இரதோற்சவம் நடைபெறுகின்றது" என்றுஎழுதியுள்ளார்.

∴ ∴ ∴

அடே அப்பா! இதில் இவ்வளவு கருத்துள்ளனவென்பது நம்மில் எவ்வளவுபேருக்குத் தெரியும்? பள்ளிக்கூடங்களில் சமய பாடம் கற்பிக்க அரசாங்கம் திட்டம் வகுத்துவருகின்றது. இவ்விதமான பல பல சந்தேகங்களையும் விளக்கும் முறையில் அப்படிப்பு இருப்பின், சமய சம்பந்தமாக யார் என்ன கேள்வி கேட்டாலும், உடனுக்குடன் பதிலளிக்க முடிவதுடன், தமக்கே உறுதியான நம்பிக்கையும் பயனும் கிடைக்கலாம்.

செய்யும் காரியங்களை, அவற்றின் கருத்தையும் நோக்கத்தையும் அறிந்து செய்வதாயின் பயன் அதிகமுண்டல்லவா?

வகுப்புவாத உணர்ச்சிக்கு இடம் தராதீர்!

'பொருளாதாரம் குன்றிவிடும்' என்கிறார் பிரதமர் நேரு

புதுடில்லி மார்ச் 29

இந்தியாவில் சமீபகாலத்தில் ஏற்பட்ட வகுப்புக் கலவரங்களை இந்தியப் பிரதமர் நேருஜி நேற்றுக் கண்டித்திருந்தார்.

ரூக்கெலாவில் தகடு உற்பத்தி சாலையொன்றை ஆரம்பித்து வைத்து நேரு பேசினார்.

மொழி அடிப்படையிலும், பிராந்திய அடிப்படையிலும் மக்கள் மத்தியில் பூசல்களை வளர்க்கக்கூடாது, அதனால் பொருள் அபிவிருத்தி வெகுவாக குன்றிவிடும் என்று அவர் குறிப்பிட்டார்.

பிரதமர் நேரு தொடர்ந்து பேசுகையில், வகுப்பு வாத உணர்ச்சிகளுக்கு மக்கள் இடம் தரக்கூடாது என்று கேட்டுக்கொண்டார்.

பொருளாதார அபிவிருத்தியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி அவர் குறிப்பிடுகையில், இந்தியா போன்ற பெரிய நாட்டில் பொருளாதார விருத்தியை ஏற்படுத்துவது அவ்வளவு காரியமல்ல, சகல இன மக்கள் மத்தியிலும் ஐக்கியமும், சகல துறைகளிலும் ஒத்துழைப்பும் இருப்பது அவசியம். எனவே, பொதுமக்கள் முழுமூச்சுடன் இந்தியாவின் நிர்மாண திட்டங்களுக்கு ஆக்கமான ஒத்துழைப்புத் தரவேண்டும்'' என்றார்.

அரசாங்கத்தின் 3வது ஐந்தாண்டு திட்டம் வெற்றிகரமாக நிறைவேறுவதற்கு ஒத்துழைக்குமாறு அவர் பொதுமக்களைக் கேட்டுக்கொண்டார்.

கைத் தொழில் விருத்திக்கு உதவ மசோதா

கொழும்பு,மார்ச் 29

கைத்தொழில்களில் தனியார் முதலீடு செய்வதற்கு உதவக்கூடிய புள்ளி விபரங்களைச் சேகரிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யவிருக்கிறது. இதற்கான ஒரு மசோதாவை அரசாங்கம் விரைவில் பார்லிமெண்டில் சமர்ப்பிக்கும்.

கைத்தொழில் விதிகள்; அபிவிருத்தி மசோதா என்று இம் மசோதா அழைக்கப்படும். கைத் தொழில், உள்நாட்டு அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயக்கா இந்த மசோதாவை பார்லிமெண்டில் சமர்ப்பிப்பார்.

கண்டி நாட்டு

கமக்காரர் கல்விக்கு ரூ. 5 லட்சம்

கொழும்பு,மார்ச் 29

கண்டி நாட்டுக் கமத்தொழில் புனருத்தாரண திட்டத்தின் கீழ், வித்தியா விருத்திக்கென 5 லட்சம் ரூபாய் மானியம் வழங்க அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

இதற்காகப் பார்லிமெண்டில் கல்வி மந்திரி ஓர் அடையாள மான்ய பிரேரணையை விரைவில் சமர்ப்பிப்பார். இத்திட்டத்துக்கான பணம் சேமிப்புகளில் இருந்து பெறப்படும் என்று தெரிகிறது.

மாத முடிவுக்குள் அறிவிக்கவேண்டும்

முள்ளியவளை,செவ்வாய்

இப்போது பங்கீட்டுப் புத்தகங்கள் இல்லாதவர்கள் இம் மாதம் முடிவதற்குமுன் தமக்கு அறிவிக்க வேண்டுமென்று, கரைதுறைப்பற்று இறைவரி அதிகாரி இப்பகுதி மக்களுக்கு அறிவித்திருக்கிறார்.

மன்னார்

சத்தியாக்கிரகத்தைக் கண்டு கண்ணீர் உகுத்தனர்!

தனிநாயக அடிகளார் அறிக்கை

மன்னார், புதன்

மன்னாரில் நடைபெறும் சத்தியாக்கிரகத்தை நேரில்கண்டு, சுவாமி, தனிநாயக அடிகளார் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:

மன்னார்த் தொகுதியிலிருந்து வந்த ஆடவர், பெண்டிர், இளைஞர், சிறுவர், குழந்தைகள் எல்லோரும் இரவும், பகலும் மறியல் செய்வதைக் கண்டு என்னுடன் வந்தவர் அனைவரும் கண்ணீர் உகுத்தனர். அவர்களின் ஆர்வத்தையும், உறுதியையும் கண்டு எதிர் காலத்தில் தமிழ் பேசும் மக்கள் தம் உரிமைகளைப் பெறுவர் என்பது தெளிவாகின்றது. வரலாற்றில் இனத்தார் சிலர் இருநூறு, முந்நூறு ஆண்டுகளாகத் தம் மொழி உரிமைகளுக்காகப் பாடுபட்டு இறுதியில் வெற்றி பெற்றிருக்கின்றனர்.

மேலும் மன்னார் தொகுதியில் மறியல் செய்யும் மாந்தர் இறைவழிபாட்டிலும், பக்திப் பாடல்களிலும் ஈடுபட்டு மறியல் செய்யும் இடத்தை ஒரு புனித நிலமாக்கியது, நம் எதிர்கால வெற்றிக்கு ஒரு அடையாளமாகின்றது. தமிழ் பேசும் மக்கள் அனைவரும் எல்லாம் வல்ல இறைவனின் திருவருளில் நம்பிக்கையுற்று வாழ்கின்றவர்கள், அவர் திருவருளின் பயனாக நம் மொழியுரிமைகளையும் நாட்டின் அமைதியையும் பெறப்போவோம், பெறுகின்றோமென்பது திண்ணம்.

ஏனைய ஏழு மாகாணங்களிலிருக்கும் தமிழர் தம்மாலியன்ற உதவிகளை எல்லாம் செய்வதற்கு முன்வந்துள்ளனர். இன்னும் தமிழ் பேசும் இனம் ஈழநாடெங்கும் ஒன்றுபட்டுள்ளது. அவனுடைய ஆற்றலைத் தடுக்க யாதொரு பகுதிக்கோ இனத்திற்கோ வலிமையே இல்லை.

மட்டக்களப்பில் சாராயகுதம்முன் 24 மணிநேர மறியல்

மட்டக்களப்பு, செவ்வாய்

மட்டக்களப்பில் சத்தியாக்கிரகிகள் மத்தியில் புது ஊக்கம் பிறந்திருக்கிறது. வேகும் வெயிலையும் பாராமல், மாதர்களும், மாணவர்களும் ஊர்வலங்கள் நடத்தி சத்தியாக்கிரகத்தில் பங்குபற்றுகிறார்கள்.

சாராயக்குத மறியல் 24 மணித்தியாலத்திற்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இதனால் அரசாங்கம் சாராயத்தைக் கொண்டுவந்து இறக்கும் முயற்சி தோல்வியடைந்துள்ளது.

மறியலியக்கம் காரணமாக சாராயத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் வடிசாராயத்திற்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது. வெளிநாட்டுக் குடிவகைகளின் விற்பனையும் அதிகரித்துள்ளது.

கத்தோலிக்கர் ஊர்வலம்

கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் சிலுவை பொறித்த கறுத்தக்கொடியுடன் ஊர்வலம் நடத்தினார்கள். அவர்கள் பக்திப் பாடல்களைப் பாடிக்கொண்டு சென்று மறியலில் கலந்து கொண்டனர்.

கச்சேரியாக மாறுகிறது

உணவுப்பொருள் விநியோகத்துக்காக ஆரம்பிக்கப்பட்ட மாவட்ட அதிபரின் இல்லத்திலுள்ள கந்தோர் மெதுவாக விரிவடைந்துவருகிறது. அக்கந்தோரில் உணவுப்பொருள் விநியோகத்துடன் வருமானம் அறவிடும் வேலையும் நடைபெற ஆரம்பித்திருக்கிறது.

மாணவர் இயக்கம்

மட்டக்களப்பு மாவட்ட மாணவர் இயக்கம் இவ்வாரமும் மாணவர்களைப் பாடசாலை செல்லாது தடைசெய்துவிட்டனர். இன்று காலை பாட்டாளிபுரத்தில் ஒன்றுகூடிய மாணவர்கள் நீண்ட ஊர்வலத்தை நடத்தினார்கள்.

மதியபோசனமின்றி வடையை மாத்திரம் சாப்பிட்டுக் கொண்டு தொண்டர்கள் தங்கள் மறியலைத் தவறாது செய்து வருகிறார்கள். ஸ்தலஸ்தாபனக் கந்தோரையும், குடிசைக் கைத்தொழிற் கந்தோர்களையும் பெண்களே மறியல் செய்து வருகிறார்கள்.

மன்னார் சத்தியாக்கிரகிகளுக்கு மாணவரின் அன்பளிப்பு

மதிய போசனமும் வாழைப்பழமும் வழங்கினர்

மன்னார், மார். 28

மன்னாரில் இன்று நடைபெற்ற மிகப்பெரிய ஊர்வலமொன்றில் சுமார் 1200 பேர் கலந்து கொண்டனர். திரு. சூசைதாசன், திரு. எஸ். கிளமெண்ட், திரு. எஸ். கந்தசாமி ஆகியோர் ஊர்வலத்துக்கு தலைமை தாங்கினர்.

ட்ராக்டர்களில் அரிசியும், இளநீரும் கொண்டு வரப்பட்டு தொண்டர்களுக்கு வழங்கப்பட்டது. உயிலங்குளத்தில் சிங்களம் மட்டும் சட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கு முகமாக கடைகளில் கதவடைப்பு நடைபெற்றது. கறுப்புக் கொடிகளும் பறக்கவிடப்பட்டன.

மாடுகளின் மீது தமிழ் ஸ்ரீ

மன்னார் செபஸ்தியார் வீதியைச் சேர்ந்த திரு. சுப்பிரமணியம் குடும்பத்தினருக்குச் சொந்தமான மாடுகள் மீது தமிழ் ஸ்ரீ குறிசுடப்பட்டிருக்கிறது. காலையிற் பிரதான தபாற் கந்தோர் வாசலிலும் மாலையில் சத்தியாக்கிரகிகளின் வாசற் பக்கமும் இந்த மாடுகள் காட்சியளிக்கின்றன.

மாணவர் அன்பளிப்பு

நேற்றைய சத்தியாக்கிரகத்தில் பாடசாலை மாணவர் சார்பாக நடந்த ஒரு ஊர்வலத்தில்

(6ம் பக்கம் பார்க்க)

அமெரிக்கா-பிரான்ஸ் கருத்துவேற்றுமை

சியாட்டோ மகாநாடு

பாங்கொக்,மார்ச் 29

பாங்கொக்கில் நடைபெறும் தென்கிழக்காசிய ஒப்பந்த (சியாட்டோ) நாடுகள் மகாநாட்டின், பிரதிநிதிகளுக்கிடையில் கருத்து வேற்றுமை ஏற்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

எல்லாரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் பொதுவான அறிக்கையொன்றை தயாரிப்பதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன.

லாவோஸ் நெருக்கடியை சமாதானமாகத் தீர்த்து வைக்க ரஷ்யா இணங்காவிடில் 'சியாட்டோ' நாடுகள் சண்டையிடுவதற்குத் தயாராய் இருப்பதாக அறிவிக்க வேண்டுமென்று அமெரிக்கப் பிரதிநிதி கருத்து வெளியிட்டிருக்கிறார். அமெரிக்கப் பிரதிநிதியின் இந்தக் கருத்தை பிரஞ்சு பிரதிநிதி ஆட்சேபித்து, சமாதானத்துக்கு எந்த வகையிலும் ஆபத்து ஏற்படக்கூடிய முறையில் அறிக்கை அமையக்கூடாதென்று தெரிவித்ததாகத்தெரிகிறது. சமாதானம் கெடுவதற்கு வழிவகுக்கக் கூடாதென்று பிரஞ்சுப் பிரதிநிதி வற்புறுத்தியிருக்கிறார்.

சேர் கொரியாவுக்கு விருந்துபசாரம்

நியூயோர்க், மார்ச் 29

ஐ. நா. வின் இலங்கை நிரந்தரப் பிரதிநிதி சேர் குளோட் கொரியாவை கௌரவிக்குமுகமாக நேற்று ஆசிய ஆபிரிக்க நாட்டுப் பிரதிநிதிகள் அவருக்கு விருந்துபசாரம் ஒன்று நடத்தினார்கள்,

தேகாரோக்கியம் குறைவு காரணமாகத் தாம் ஓய்வு எடுக்கப்போவதாகச் சில தினங்களுக்குமுன் சேர் குளோட் கொரியா அறிவித்திருந்தார். அதன் காரணமாகவே ஆசிய ஆபிரிக்க நாடுகள் அவருக்கு நேற்று விருந்தளித்து ஆசி கூறின. சேர் குளோட் கொரியாவின் திறமையையும், சேவையையும் பாராட்டி பிரதிநிதிகளில் பலர் பேசினார்கள்.

பாரிஸில் சுவர்ணப்பூமா

பாரிஸ், மார்ச் 29

இளவரசர் சுவர்ணப்பூமா இப்பொழுது பாரிஸ் நகரிலிருக்கிறார். அவர் நாளையன்று அதிபர் டீகாலை சந்திப்பார். அடுத்த மாதம் மொஸ்கோவுக்குச் செல்ல அவர் திட்டமிட்டிருக்கிறார்.

பல்கேரிய தூதுகோஷ்டி

புதுடில்லி, மார்ச் 29

பல்கேரிய பார்லிமெண்ட் தூதுகோஷ்டியொன்று இந்தியா வந்திருக்கிறது. இந்தியாவின் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களையும் தூதுகோஷ்டியினர் சென்று பார்வையிடுவார்கள் என்று தெரிகிறது.

விமான விபத்தில் 53 பேர் கொலை

மேற்கு ஜெர்மனியில் செக். விமானம் ஒன்று விழுந்து நொருங்கியதில் சுமார் 53 பேர் கொலையுண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

தொழில் நிபுணர்களின் பற்றுக்குறை

கொழும்பு, மார்ச் 29

நாட்டில் தொழில் நுட்ப விற்பன்னர்களதும், பொறியியல் வல்லுனரினதும், எண்ணிக்கை மிகக் குறைவாக இருப்பதால், அரசாங்கத்தின் பத்து வருட அபிவிருத்தித் திட்டத்தை அமுல்நடத்துவதில் வில்லங்கம் ஏற்பட்டிருக்கிறது.

தொழில் நுப அறிஞர்களின் பற்றுக்குறை சம்பந்தமாக நித்யாதிரி பிலிக்டயஸ், பண்டாரநாயக்காவும் விவசாய மந்கர் திரு. சி. பி. சில்வாவும் பந்திரிசபைக்கு கவலை தெரிவித்திருக்கிறார்கள்.

'ஹென்ற்லி'
உடை அலங்காரத்தின்
உன்னத அடையாளமாகும்

ஹென்ற்லி

★ சேட் ★ ஷோட்
★ காற்சட்டை ★

ஹென்ற்லி சேட், ஷோட்ஸ், காற்சட்டை ஆகியவற்றை அணியும் ஆடவரும், இளைஞரும் சௌகரியத்தை அனுபவிப்பதுடன் வசீகரமான தோற்றத்தையும் பெற்று அழகுடன் விளங்குகின்றனர்.

ஹென்ற்லி உடைவகையில்
நீங்கள் எதைத் தெரிந்தெடுத்து வாங்கினாலும்,
அது கொடுத்த பணத்திற்கு நிறைந்த பெறுமதியாகும்.

ஹென்ற்லி (காமெண்ட்ஸ்) லிமிட்டெட்,
பழைய விமான நிலைய வீதி,
(Old Air Port Road)
இரத்மலானை

யாழ்ப்பாணப் பகுதிகளுக்கு ஏக விநியோகஸ்தர்கள்:
ஆதம்பாய் ஸ்ரோஸ்
16, பெரியகடை,
யாழ்ப்பாணம்

வரி விளம்பரம்

உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 10-50. பல நோய்களுக்கும் கற்றலோக் (Catalogue) இனும்.

வைத்தியர் பரிபூரணநந்தர்,
கைலாசபிள்ளையார் கோவிலடி,
Advt. 58 யாழ்ப்பாணம்.

வானொலி நிகழ்ச்சிகள்

கொழும்பு

(செய்திகள் காலை 7, பகல் 12. 45, மாலை 6, இரவு 9,

வியாழன் 30-3-61

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6 55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7–15 தேர்ந்திசை, 7-30 திரை இசை 8–00 வாத்தியஇசை 8-15 இஸ்லாமிய கீதங்கள், பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை. மாலை 5-00 பிறந்தினவாழ்த்துககள்,* 5-15 நிலைய ஒலிப்பதிவுகள் * 5-45 திரை இசை* 6–15 கிராமசஞ்சிகை' 6-45 கிளாரினெட், 7-00 என் அச்சுதன் பாகவதர் - பாட்டு 7-45 நேயர் விருப்பம், 9-15 இஸ்லாமிய, நிகழ்ச்சி 10-00 தமிழோசை (பி. பி. ஸி அஞ்சல்)

* செங்கடக உப நிலையத்தில் அஞ்சல்.

இராணுவத்தை வாபஸ்பெற கோரிக்கை

வாழைச்சேனை, மார்ச் 28

வடக்கு கிழக்கு மாகாணங்களிலிருந்து இராணுவத்தை வாபஸ் பெறும்படி உள்நாட்டு அமைச்சைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்று கோறளை மத்திய கிராமச்சங்கக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. தீர்மானத்தை தலைவர் திரு. என். கே. கனகரத்தினம் முன்மொழிந்தார். அவர் பேசுகையில், வடக்கு கிழக்கு மாகாணங்களில் தற்பொழுது நிலவும் சிக்கலான சூழ்நிலையைச் சீர்படுத்தவும் தமிழ் பேசும் மக்களின் நல்லெண்ணத்தைப் பெறவும் அரசாங்கம் விரும்பினால் வடக்கு கிழக்கு மாகாணங்களிலிருந்து இராணுவத்தை உடனடியாக வாபஸ் பெறவேண்டும் என்றார்.

அகில இலங்கை சைவ சித்தாந்த மன்றம்

கொழும்பில் ஆரம்பக் கூட்டம்

கொழும்பு, மார்ச் 28

அகில இலங்கை சைவ சித்தாந்த மன்றத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் வெள்ளவத்தை சைவ மங்கையர் கழகத்தின் சிவானந்த நிலைய மண்டபத்தில் மார்ச் மாதம் 26-ம் திகதி மாலை நடைபெற்றது. கூட்டத்துக்கு உணவு, வர்த்தக தபாற் போக்குவரத்து அமைச்சரின் நிரந்தரக் காரியதரிசி திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை தலைமை தாங்கினார்.

சைவ சித்தாந்தக் கருத்துக்களை மக்கள் நன்கு அறியச் செய்வதற்கும், சைவத்தை இந் நாட்டில் போற்றிப் பேணி வளர்ப்பதற்கும் தமிழகத்தில் இருப்பனபோன்று ஈழத்திலும் ஒரு சைவ சித்தாந்த மன்றம் நிறுவுதல் அவசியம் எனத் தலைவர் தமது ஆரம்ப உரையில் வற்புறுத்தினர்.

'மேன்மைகொள் சைவ நீதி' தழைப்பதற்கு மன்றம் ஆற்றக் கூடிய பணிகளை முதலியார் குல. சபாநாதன் தொகுத்து ரைத்தார்.

மன்றத்திற்கான விதிகள், அதன் பணிகள், இலட்சியங்கள் முதலானவற்றை வகுப்பதற்கு ஒரு குழுவைச் சபை நிறுவியது. அக் குழுவில் திருவாளர்கள்: கோ. ஆழ்வாப்பிள்ளை. பொ. ஸ்ரீஸ்கந்தராஜா, மு. வயிரவேல்பிள்ளை, க. சிற்றம்பலம், சோ. சபாபதிப்பிள்ளை, சி. நல்லதம்பி, ஆ. கந்தையா, மு. நமசிவாயம், டாக்டர். த. நல்லைநாதன் ஆகியோர் உறுப்பினராகவும், முதலியார் குல. சபாநாதன் குழுவின் செயலாளராகவும் பணிபுரிவர்.

சைவப் பெரியார்கள் பலர் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். பலர் மன்றம் மேற்கொள்ளவேண்டிய பணிகளை விரித்துரைத்தனர்.

உகண்டா தேர்தல்

லண்டன், மார்ச் 28

உகண்டா பொதுத் தேர்தலில் திரு. கிவதனுகா தலைமையிலுள்ள ஜனநாயகக் கட்சி பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றுள்ளது. பரிபூரண சுதந்திரமே தமது அரசாங்கத்தின் கொள்கையாய் இருக்குமென திரு. கிவனேகா அறிவித்தார்.

கடிகாரக் காட்சியில் காலம் காட்டும் நடி

பகலிலும் இரவிலும் நேரத்தைக்கண்டறிய பண்டைக் காலத்திலிருந்தே உலக மக்கள் எவ்வித கருவிகளை உபயோகித்தனரோ அவற்றை எல்லாம் சேகரித்து ஸ்டட் கார்ட்டில் கண்காட்சி ஒன்று நடத்தப்பட்டுவருகின்றது. இவற்றை பார்ப்பதற்காக உலகின் பல பாகங்களிலிருந்தும் அநேகர் ஸ்டட் காட்சிக்கு யாத்திரை செய்கின்றனர்.

இக்கடிகாரக் காட்சியில் பல நாடுகள் முற்காலத்தில் உபயோகித்த காலம் காட்டும் கருவிகள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் ஒன்று இந்தியாவிலிருந்து கிடைத்துள்ள கைக் கடி. சூரியன் உதயமான பின்னர் எவ்வளவு அரை மணி நேரம் கழிந்து விட்டன என்பதையும் சூரிய அஸ்தமனத்துக்கு இன்னும் எவ்வளவு அரை மணி நேரம் கழிந்துவிட்டன என்பதையும் சூரிய அஸ்தமனத்துக்கு இன்னும் எவ்வளவு அரை மணி நேரம் இருக்கின்றதென்பதையும் இத்தடியிலுள்ள அளவுகள் மூலம் கண்டு கொள்ள முடியுமாம். இத்தடி 2000 ஆண்டுகளுக்கு முன்னர் உபயோகிக்கப்பட்டுவந்ததாகச் சொல்லப்படுகிறது.

ஆடம்பரச் செலவு வேண்டாம்

இளைஞர்களுக்கு யோசனை

எமது உரிமைப் போர் வெற்றியளிக்கும்வரை வீண் ஆடம்பரச் செயல்களில் இறங்கவேண்டாம் என்று வழக்கம்பரை இளைஞர் கழகத் தலைவர் திரு. எம். எஸ். இராசா வாலிபர்களைக் கேட்டுக்கொண்டார். ச. ஆறுமுகம், தா. சுந்தரம் ஆகியோர் இன்றைய நிலையில் எமது கடமை என்ன என்பதை விளக்கிப் பேசினர்.

கூட்டம் வழக்கம்பரை இளைஞர் கழகத்தின் ஆதரவில் நடைபெற்றது.

சத்தியாக்கிரகத்தை

'முறியடிப்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம்

சாவகச்சேரி எம். பி. கண்டனம்

சாவகச்சேரி, செவ்வாய்

'சத்தியாக்கிரக இயக்கத்தை பங்கீட்டரிசிப்பிரச்சினை மூலம் முறியடிக்க அரசாங்கம் முயல்வது ஒருவெக்கக்கேடான செயல்' என்று சாவகச்சேரி எம். பி. திரு. வின். நவரத்தினம் தொண்டர்கள் கூட்டமொன்றில் இங்கு பேசும் போது கூறினர்.

அரசாங்க அலுவல்கள் மூலமாகவும், அதிகாரிகளின் வாசஸ்தலங்களிலிருந்தும், அரிசிப் பங்கீடு செய்ய அரசாங்கம் முயற்சிப்பதன்மூலம், கூட்டுறவு சங்கங்களை அரசாங்கம் புறக்கணித்து வருகிறது என்றார் திரு. நவரத்தினம்.

மக்களுக்கு அரிசி வழங்க அரசாங்கம் உண்மையில் அக்கறை கொண்டிருப்பின், சத்தியாக்கிரகம் ஆரம்பிக்கப்பட்டமுதல் இருவாரங்களில் அரிசிப்பங்கீடு செய்தது போல் இப்பொழுதும் செய்யலாம். ஆனால் அரசாங்கம் மக்களுக்கு அரிசி வழங்வதில் அல்ல, சத்தியாக்கிரகத்தைத் தகர்ப்பதில் தான் அக்கறை கொண்டிருக்கிறது. அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை மக்களின் வெறுப்பை அதிகரிக்கிறது என்று திரு. நவரத்தினம் கூறினர்.

சத்தியாக்கிரகச் செய்திகள்

வாழைச்சேனை, மார். 28

சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டுவரும் "கிறிஸ்தவர்கள் இரவில் தேவமாதாவின் சொரூபத்தை வைத்து, கைகளில் மெழுகுவர்த்தியை ஏந்திய வண்ணம் முழங்காலில் இருந்து செபமாலை சொல்லி வரும் காட்சியைக் கண்டு, கிறிஸ்தவர்கள் அல்லாதாரும் முழங்காலில் இருந்து அவர்களோடு செபம் சொல்லிவருகிறார்கள்.

* * *

மட்டக்களப்பு பொது நூல் நிலையத்தில் இருந்து சத்தியாக்கிரகத்தின்பின் காந்தி மகானின் நூல்களையும், இந்திய சரித்திர நூல்களையும் மக்கள் அதிகமாகப் போட்டி போட்டு எடுத்துச் செல்கின்றனர்.

* * *

பசறை "ஒப்ரன்" பகுதியிலிருந்து சுமார் முப்பது மலைநாட்டுத் தமிழர்கள் கே. எம். கோவிந்தனின் தலைமையில் மட்டக்களப்புக்குவந்து சத்தியாக்கிரகம் செய்தார்கள். மாத்தளையிலிருந்தும் ஒருகோஷ்டி இன்று மட்டக்களப்புக்குச் சத்தியாக்கிரகம் செய்வதற்கு வந்துள்ளது.

* * *

மிருவோடையிலிருந்து ஜனாப் சேது முகமது தலைமையில் ஒரு கோஷ்டி மட்டக்களப்புக்கு மறியல் செய்வதற்காகச் சென்றுள்ளது. அக்கோஷ்டியில் சுமார் இருபது பேர் இடம் பெற்றுள்ளனர்.

* * *

மட்டக்களப்புப் பகுதியில், பிரதம மந்திரி சமீபத்தில் வானொலி மூலம் வெளியிட்ட செய்திக்குப் பின்னர் சத்தியாக்கிரகிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

'கார் விபத்து

வாழைச்சேனை, மார். 28

திங்கட்கிழமை காலை வாழைச்சேனையிலிருந்து மட்டக்களப்பை நோக்கிச் சென்ற கார் ஒன்று மட்டக்களப்பு—திருமலை வீதியில் விபத்துக்குள்ளாகியது. இக்காரில் பிரயாணம்செய்த பிரயாணிகளில் முறக்கட்டான்சேனையைச் சேர்ந்த எஸ். பொன்னுத்துரை என்பவர் மிகவும் ஆபத்தான நிலையில் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உங்கள் குழந்தையின் தேகாரோக்கியமே அதிமுக்கிய

மில்க்கோஸ்

குழந்தைகளை திடகாத்திரமாக வளர்க்கிறது

உங்கள் குழந்தையின் தேகாரோக்கியமே அதிமுக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயம். உங்கள் குழந்தைக்கு தாய்ப்பால் ஊட்டமுடியாது போனால் அவனின் மெல்லிய ஜீரண உறுப்புகளுக்கு உகந்த போஷாக்களிக்கும் சிசு-உணவை அவனுக்கு ஊட்டுவதற்கு நிச்சயப்படுத்துங்கள்.

டாக்டர்கள், மில்க்கோஸ்தான் குழந்தைகளுக்கு இன்றிமையாத சிசு உணவு என்று கூறுவார்கள். மில்க்கோஸில் சரியான விகிதாசாரப்படி பிசிதம், கரிகீரகைகள், கொழுப்புச் சத்துகள், சேர்க்கப்பட்டிருக்கின்றன. மில்க்கோஸில் தேகவளரச்சியையும் நல்ல தேகாரோக்கியத்தையும் தரும் மேலதிக விட்டமின் சத்துகளும், இரும்பு சத்துகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

முழு ஆடை நிரம்பிய பசுப்பாலிலிருந்து விஞ்ஞான ரீதிப்படி தயாரிக்கப்படும் இந்த மில்க்கோஸ் இலங்கையின் சீதோஷ்ண நிலைமைக்கேற்றவாறு விசேஷமாகப் பொதியப்பட்டு—உங்களுக்கு சுத்தமாகவும் பத்திரமாகவும் கிடைக்கிறது.

உங்கள் குழந்தைகளை ஆரோக்கிய குழந்தைகளாக வளர்க்க அவர்களுக்கு இன்றே மில்க்கோஸ் கொடுக்க ஆரம்பியுங்கள்.

மில்க்கோஸ்

இன்றியமையாத சிசு-உணவு

ஹார்லிக்ஸ் தயாரிப்பாளரால் தயாரிக்கப்படுகிறது.

'பட்டினி-ராணுவத்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யும் உரிமை ஆகியன எங்களுக்கு விலைமதிக்கவொண்ணாத உரிமையாகும்.

மொழி உரிமைபற்றியது மட்டும் அல்ல இப்போதைய பிரச்சினை. சட்டபூர்வமாக உரிமைகள் வழங்கப்படலாம். ஆனால் அவைகளை நிர்வகிக்க அரசியல் அதிகாரமின்றேல், அது வெறும் புத்தகச் சட்டமாகவே இருக்கும்.

அனுபவத்தின் மூலம்தான் நாமனைவரும் பாடம் கற்கிறோம். எங்களுடைய கருத்துக்களைப் பரிசீலனை செய்வதில் கௌரவம் குறுக்கே நிற்கக் கூடாது.

எங்கள் அரசியலமைப்புச் சட்டத்தின்சிற்பி சேர் ஐவோர் ஜென்னிங்ஸ் என்பது அனைவருக்கும் தெரியும். அதிகார மாற்றம் செய்யும்போது ஏற்படும் விளைவுகளைப் பற்றி அவர் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.

"எல்லாவற்றையும் விட இன வித்தியாசம் உச்ச நிலையை அடையும். வாக்குகளைப் பெறும்பொருட்டு அரசியல் வாதிகள் இதை முற்றாகப் பயன்படுத்திக் கொள்வார்கள். ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் நான் பெற்ற அனுபவத்தைக் கொண்டு, இந்தப் பிரிவினைச் சக்திகளைத் தடுப்பதற்குச் சட்டம் இயற்றப்பட வேண்டும் எனக் கூறுவேன். நைஜீரியாவிலுள்ளதைப் போலச் சம்மேளன அரசியலமைப்பே இதற்குப் பரிகாரம்.

கானாவிலுள்ளதைப் போல் பிரதேச சுயாட்சியாய் அது இருக்கலாம். அரசியலமைப்புச் சட்டத்தில், மைனாரிட்டிகளால் அஞ்சப்படும் அபாயத்தைத் தடுப்பதற்கு வழிகள் வகுத்திருக்க வேண்டும். அவர்கள் அஞ்சக்கூடிய காரியங்கள் அவர்களின் காணிகளாய், மொழியாய், அரசாங்க உத்தியோகமாய், கல்வி முறையாய் இருக்கலாம். உதாரணமாக, மலாயா அரசியலமைப்புச் சட்டத்தில் காணிகள்பற்றி அதிகமாக விளக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் மொழி, பப்ளிக் சர்வீஸ் கமிஷனுக்கு உத்தியோக நியமனம் ஆகியன தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது. கல்வி முறை கனடா அரசியல் சட்டத்தில் விளக்கப்பட்டுள்ளது."

இலங்கைத் தமிழ் மக்கள், சேர் ஐவோர் ஜென்னிங்ஸ் குறிப்பிட்டுள்ள சகல அம்சங்களிலும் தாக்கப்பட்டிருக்கிறார்கள். சேர் ஐவோர், அடிக்கடி கலந்தாலோசிக்கக்கூடிய அரசியலமைப்புச் சட்ட நிபுணர். சிங்களத் தலைவர்களுக்கு அவர்மீது பெருமதிப்புண்டு.

பரந்த மனப்பான்மையும் தியாக உணர்ச்சியும் கொண்ட தலைவர்கள் வேண்டும் என சேர்ஐவோர் கூறுவதற்கு அவர்கள் செவி சாய்ப்பார்களென்று நம்புவோமாக. தமிழ் மக்களைப் பொறுத்தவரை, அரசாங்கத்தின் இனக் கொள்கையைத் தொடர்ந்து எதிர்ப்பார்கள். உணவு மறுக்கப்பட்டாலும், இராணுவத்தின் தாக்குதலுக்காளானாலும் எங்கள் போராட்டம் தொடர்ந்து நடக்கும்.

பங்கீட்டரிசிப் பிரச்சினை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பங்கீட்டரிசி உடனடியாக வழங்கப்படுவதற்கு ஒழுங்குகள் செய்யும்படி யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. வாசஸ்தல வாசல் தடைசெய்யப்படாமலிருந்தால் கூட்டுறவுச் சமாஜங்கள் பங்கீட்டரிசிக்கான அனுமதிச்சீட்டுக்களை அங்கு சென்று பெற்றுக்கொள்ள முடியும். தங்கள் பங்கீட்டரிசியைப் பெற முடியாத காரணத்தால் சுமார் நான்கு இலட்சம் மக்கள் அதிக விலை கொடுத்து அரிசி வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. தமிழரசுக் கட்சித் தலைவர்களின் பயமுறுத்தல் மற்றும் நடவடிக்கைகள் காரணமாக கூட்டுறவுச் சமாஜங்கள் வாசஸ்தலத்துக்குச் சென்று, பங்கீட்டரிசி பெறுவதற்கான அனுமதிச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள முடியாமல் தடுத்ததால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் கச்சேரியைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் வேலைக்குச் சென்றதும், தர்மப் பணம், காசநோய் படி, சம்பளம், பென்ஷன் பணம் முதலியவைகளை வழங்குவதற்கான ஒழுங்குகளை அரசாங்க அதிபர் செய்வார்.

இந்தியச் செய்திகள்

வகுப்புக் கலவரத்தைத் தூண்டிவிடுபவர்களுக்கெதிராகத் தடுப்புக்காவல் சட்டத்தை உபயோகிக்க வேண்டிய தருணம் வந்துவிட்டதென தற்காலிக உள்நாட்டு மந்திரி திரு. லால்பகதூர் சாஸ்திரி லோகசபையில் கூறியபோது, அங்கத்தினர்கள் கரகோஷத்துடன் அதை ஆதரித்தனர்.

∴ ∴ ∴

நாட்டைவிட்டு வெளியேறுமாறு 70 சீனர்களுக்கு உத்தரவிடப்பட்டதாயும், 10 பேர் ஏற்கனவே வெளியேறிவிட்டதாயும், மற்றவர்கள் வெளியேற ஏற்பாடு செய்து கொண்டிருப்பதாயும் அறிவிக்கப்பட்டது.

∴ ∴ ∴

இந்தியா வருடம் 1க்கு 1000 கோடி ரூபாய் பெறுமதிக்கு இறக்குமதி செய்கிறதென்றும் ஏற்றுமதி 636 கோடி ரூபாய் என்றும் திரு. லால்பகதூர் சாஸ்திரி குறிப்பிட்டார்.

∴ ∴ ∴

புதுச்சேரி ராஜ்யத்தின் ஜனத்தொகை 3,69,000 என மதிப்பிடப்பட்டிருக்கிறது.

விமானி இறந்தும் மனைவி விமானம் செலுத்தினார்

பானர்ஸ்பிரிங்ஸ், மார்ச் 29

விமானம் செலுத்திக்கொண்டிருக்கையில் விமானி மாரடைப்பினால் இறந்து விடவே அவரது மனைவி உடனடியாக விமானத்தை ஒரு மைதானத்தில் இறங்கச் செய்தார். விமானத்தை இறங்கச் செய்ய முற்பட்டது அவருக்கு முதல் தடவை.

விமானி லாயில்ட் பிரீட், அவரது மனைவி, புதல்வன் மூவருமாக திருமணமொன்றில் கலந்துவிட்டு கான்ஸாஸ் நகர் நோக்கித் திரும்பிக்கொண்டிருந்தனர். விமானி திடீரென மாரடைப்பினால் இறந்து விட்டார். உடனே திருமதி பிரீட் சிறிதும் நிதானமிழக்காமல் தனது புதல்வனின் உதவியுடன் விமானி ஆசனத்திலிருந்து தனது கணவனின் சடலத்தை அப்புறப்படுத்தி, 2000 அடி உயரத்திலிருந்து விமானம் கீழேவிழாதுதடுத்து மைதானமொன்றில் இறங்கச் செய்தார்.

---

105 மூடை அரிசி கொழும்பு வர்த்தக சங்கம் அன்பளிப்பு

கொழும்பு, வியாழன்

105 மூடை அரிசியும் ஏழு மூடை பருப்பு, உருளைக்கிழங்கு, உப்பு முதலான உணவுப் பொருள்களும் நேற்று தமிழரசுக் கட்சித் தலைவரிடம் கொழும்பு வர்த்தக சங்கத்தினர் அன்பளிப்பாக வழங்கினர்.

தமிழர் உரிமைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சத்தியாக்கிரகிகளுக்கு உதவி புரியும் வகையில் இப்பொருட்களை கொழும்பு வர்த்தக சங்கத்தின் சார்பில் திரு. செல்லத்துரை என்பவர் வழங்கினார்.

மௌன பிரார்த்தனையில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

னம் புகார் செய்தார். ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. ஏ. கந்தையாவும் இராணுவச் சிப்பாய்களின் இந்த நடவடிக்கையைப்பற்றி யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபரிடம் புகார் செய்திருக்கிறார்.

செவ்வாய்க்கிழமை நண்பகலிலும் சத்தியாக்கிரகிகள் எழுந்துநின்று மௌனமாகப் பிரார்த்தனை செய்துகொண்டிருந்த சமயம் பழைய பூங்கா வாசல் வழியாக உட்செல்லவந்த ஒரு 'ஜீப்' இரண்டுதடவை 'ஹார்ன்' அடித்துக்கொண்டு உள்ளே சென்றது. இதைக் கவனித்த ஊர்காற்றுறை எம். பி. திரு. வி. ஏ. கந்தையா அங்கு அச்சமயம் நாற்காலியில் உட்கார்ந்துஇருந்தகச்சேரிஉத்தியோகத்தர்ஒருவரிடம், "பிரார்த்தனை செய்கிறார்களென்பது கூட இந்தப் பொலிசாருக்குத் தெரியவில்லையே!" என்று குறிப்பிட்டார்.

உடுவில் எம். பி. தலைமையில்

நேற்று மாலை தொடக்கம் இன்று மாலைவரை உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் தலைமையில் மறியல் நடைபெறுகிறது. தமிழரசுக்கட்சியின் இதர எம். பி. க்களுடன் உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரமும் 'பழைய பூங்கா' வாசலில் மறியல் இரவு பகலாகக் கலந்துகொண்டு வருகின்றார்.

இன்றுமாலை தொடக்கம் நாளை மாலை வரை 18 வயதுக்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட மாணவர் இயக்கத்தினர் மறியல் செய்வர். வயது வந்த மாணவர்களை உரிமைப் போராட்டத்துக்கு அழைப்பதென தமிழரசுக் கட்சியின் செயற்குழுசெய்த முடிவு நேற்று அறிவிக்கப்பட்டது. இன்று மாலை ஐந்து மணிக்கு மாணவர் இயக்கத்தினர் யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்திலிருந்து கச்சேரிக்கு ஊர்வலமாகச் செல்வர்.

இன்றுமாலை பொதுக்கூட்டடம்

இன்றுமாலை நல்லூர்கைலாசபிள்ளையார் கோயிலடியில் டாக்டர் இ. எம். வி. நாகநாதன் தலைமையில் நடைபெறவிருக்கும் பொதுக் கூட்டத்தில் சமீபத்தில் வெளியான பலதுண்டுப் பிரசுரங்களில் கிளப்பப்பட்டுள்ள கேள்விகளுக்கு அவர் பதிலளிப்பாரென அறிவிக்கப் படுகிறது. சனிக்கிழமை மாலை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் ஜின்னா மைதானத்தில் பொதுக்கூட்டம் நடைபெறவிருக்கிறது.

வாலிபர்சங்கம் பணமுடிப்பு

யாழ்ப்பாணம் பலாலி வீதியைச் சேர்ந்த சன்மார்க ஐக்கிய வாலிபர் சங்கத்தினர் நேற்று உரிமைப்போராட்ட நிதிக்கு பணமுடிப்பொன்றை அளித்தனர்.

நல்லூர் வட்டாரம் ஊர்வலமும் சத்தியாக்கிரகமும்

யாழ்ப்பாணம், வியாழன்

சமசமாஜக் கட்சியைச் சேர்ந்தவரும் யாழ்ப்பாண மாநகர சபையின் நல்லூர் வட்டாரப் பிரதிநிதியுமான திரு. ஆ. துரைராஜசிங்கம் தமது வட்டார மக்களை ஊர்வலமாக அழைத்துச் சென்று சத்தியாக்கிரகத்தில் கலந்துகொள்வதற்கான ஒழுங்குகளைச் செய்து வருகிறார்.

மொழி உரிமைக்காகப் போராட்டம் நடத்திவரும் சத்தியாக்கிரகிகளுக்கு ஒரு வாரத்துக்கு தொடர்ச்சியாக உணவுப் பார்சல் வழங்குவதற்கும் திரு. துரைராஜசிங்கம் நல்லூர் வட்டார மக்களுடனும் தமிழரசுக் கட்சி சத்தியாக்கிரக அமைப்பாளருடனும் கலந்து ஒழுங்து செய்து வருகிறார்.

யேமன் மன்னர் கொலைமுயற்சி விசேஷ விசாரணைச்சபை

லண்டன், மார்ச் 29

யேமன் மன்னரைக் கொலை செய்ய நடைபெற்ற முயற்சி பற்றி விசாரணைநடத்த ஒரு விசேஷ விசாரணைச்சபையை மன்னர் நியமித்திருக்கிறார். இதுசம்பந்தமாகப் பலர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். இச்சதியில் ஈடுபட்டவர்களுக்குக் கடும் தண்டனை விதிக்கப்படும் என அறிவிக்கப்படுகிறது.

திரு. மணி இந்திய தூதராக நியமிக்கப்படுவார்?

புதுடில்லி, மார்ச் 29

காட்டுமண்டுவிலுள்ள இந்தியத் தூதுவராலயத்தில் பணிபுரியும் திரு. பி. ஆர். எஸ். மணி, இலங்கையில் இந்திய ஹைகமிஷனராக நியமிக்கப்படுவார் எனத் தெரிகிறது. முன்பு எழுத்தாளராக இருந்த திரு. மணி பின்பு இந்திய வெளிநாட்டுச் சேவையில் சேர்ந்தார்.

சிவனொளிபாத யாத்ரீகருக்கு வைத்திய உதவி

கொழும்பு, புதன்

சிவனொளிபாத யாத்ரீகர்களுக்கு வைத்திய உதவி அளிக்கவிருக்கும் தொண்டர்களில் அமெரிக்கர்களும், இஸ்ரேலியர்களும் இருக்கின்றனர். இலங்கை சர்வகலாசாலைப் பேராசிரியர் திரு. இராஜசூரியா தலைமையில் 80 தொண்டர்கள் 5 நாள் வைத்தியஉதவி அளிப்பார்கள்.

ஓரிஸ்ஸாவில் புது மந்திரிசபை

புதுடில்லி, மார்ச் 29

ஓரிஸ்ஸாவில் ஜூலை மாதம் 1-ம் திகதி புது மந்திரிசபை ஏற்படுமென்று ரெவென்யூ மந்திரி திரு. கோபால்ரெட்டி சமீபத்தில் லோக சபையில் தெரிவித்தார்.

ஓரிஸ்ஸா பட்ஜெட் மீது நடைபெற்ற விவாதத்துக்குப் பதிலளிக்கையிலேயே திரு. ரெட்டி இவ்விபரத்தைத் தெரிவித்தார்.

பாக்-இந்திய வர்த்தக ஒப்பந்தம்

புதுடில்லி, மார்ச் 29

பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையில் செய்துகொள்ளப்பட்டுள்ள வர்த்தக ஒப்பந்தம் அமுல் நடத்தப்படுவதுபற்றிய சாத்தியக் கூறுகளை ஆராய்ந்த இந்தியா - பாகிஸ்தான் அதிகாரிகள் நேற்று தமது வேலைகளை முடித்துக் கொண்டனர்.

"தமிழ்நாடு சர்வகலாசாலை"

சென்னை, மார்ச் 29

சென்னை சர்வகலாசாலையின் பெயரை, 'தமிழ்நாடு சர்வகலாசாலை' என்று மாற்ற நடவடிக்கை எடுக்கும்படி. அடுத்த சர்வகலாசாலை செனட்கூட்டத்தில் வேண்டுகோள் விடுக்கப்படும்.

தொழில்நுட்பக் கல்லூரி

யாழ்ப்பாணம் வியாழன்

தொழில்நுட்பக் கல்லூரியின் பொதுக் காரியாலயத்தையும் அதிபர், தரைப்படையிடம் ஒப்படைத்து விட்டார். ஆனால் அங்கு வேலைசெய்யும் ஊழியர்களை பிரதம வர்த்தக போதன ஆசிரியர் இல்லத்தில் கையொப்பமிடுமாறு கேட்டதாகத் தெரிகிறது. அதற்கு அவர்கள் வீடுகளில் கையொப்பமிடுவது வழக்கமில்லையென்றும் தொழிற்கந்தோரில் அல்லது கல்லூரியின் முன் கையொப்பமிட முடியுமென்றும் தெரிவித்தனராம்.

பங்கீட்டரிசி!

யாழ்ப்பாணம், வியாழன்

புதிதாக 'உத்தரவாதம் பெற்ற' வியாபாரிகளாக நியமிக்கப்பட்ட வியாபாரிகள் சிலர் பங்கீட்டரிசி விற்கும் பொறுப்பு தங்களுக்கு வேண்டியதில்லையென அரசாங்க அதிபருக்குத் தெரிவித்து விட்டனராம்.

நல்லூர் அரசடியில் ஒரு கடைக்காரர் பங்கீட்டரிசி வழங்க முயற்சி செய்ததனால் அப்பகுதி மக்களுக்கிடையில் குழப்பம் ஏற்படக்கூடிய நிலைமை தோன்றியதாகவும் பின்னர் அரிசி வழங்கப்படவில்லையெனவும் அறியப்படுகிறது.

இந்தியாவில் மதுவிலக்கு விஸ்தரிப்பு

இந்தியாவில் மதுவிலக்கை விஸ்தரிக்கப் போவதாயும், எவ்வகையாலும் இக்கொள்கையைத் தளர்த்தப் போவதில்லை என்றும் இந்திய உள்நாட்டு மந்திரி பி. என். தத்தர் லோக சபையில் அறிவித்தார்.

செய்தித் திரட்டு

போர்ச்சுகல் தலைநகரான அங்கோலவில், அமெரிக்க ஸ்தானிகராலயத்தின் முன் சுமார் லட்சம்பேர் கூடி, கற்களையும், மைப்போத்தல்களையும் அதன்மீது வீசினர். ஐ. நா. சபையில் அங்கோலா பற்றி நடந்த விவாதத்தில் அமெரிக்காவின் போக்கை ஆட்சேபித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடந்தது.

∴ ∴ ∴

அமெரிக்க இராணுவச் செலவை 200 கோடி டாலர் அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளனர்.

∴ ∴ ∴

நேபாளத்தில் விவசாயிகளுக்கும் நிலச் சுவாதார்களுக்கும் ஏற்பட்ட கைகலப்பில் 3 பேர் கொல்லப்பட்டனர்.

சிக்கிமில் சீனர் புகுந்தனர்

காஸ்டாக், மார்ச் 29

சிக்கிம் பிரதேசத்தில் 23-ம் திகதி சில சீனர்கள் நதுலா எல்லைக்கருகில் புகுந்ததாகத் தெரிகிறது.

சுமார் 25 பேர், எல்லைக்குள் 300 யார் தூரம் வந்ததாகச் சொல்லப்படுகிறது.

ஓடிவந்த சில திபேத்தியரை விரட்டிக் கொண்டு அவர்கள் சிக்கிமுக்குள் வந்ததாகக் கருதப்படுகிறது.

டிச. 28ல் தங்கனிகா சுதந்திரம்

லண்டன், மார்ச் 29

வருகிற டிசம்பர்28-ம் திகதி தங்கனிகா பூரண சுதந்திரம் அடையுமென அறிவிக்கப்பட்டது.

உபதேர்தல் முடிவுகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குருநாகல்

குருநாக்கலில் வாக்குச் சீட்டுகள் மீண்டும் எண்ணப்பட்டதால், நள்ளிரவு வரை முடிவு அறிவிக்கப்படவில்லை. பிறகு குருநாக்கல் கச்சேரியில் விசாரித்ததில், சுதந்திரக் கட்சி அபேட்சகர் திரு. ஜயபத்திரான வெற்றி பெற்றதாக இரவு 1 மணிக்குத் தெரியவந்தது.

முஸ்லிம்கள் சிங்களத்தை பயில்வது மிக எளிதாம்!

கல்வி மந்திரி கருத்து

வெலிகம,மார்ச் 29

"முஸ்லிம் வீடுகளில் தமிழ் பேசப்பட்ட போதிலும், இந்த நாட்டில் முஸ்லிம்களின் தாய் மொழி தமிழ் அல்ல".

இவ்வாறு கல்வி மந்திரி ஜனுப் பதியுதீன் மகமூத்து, ஹென்வலயிலுள்ள ஜயதிஸ்ஸ வித்தியாலயத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினர்.

கடந்த காலங்களில் தமிழை முஸ்லிம்கள் ஏற்றுக் கொண்டதுபோல் தேசிய மொழியான சிங்களத்தை இப்பொழுது ஏற்றுக் கொள்ளுவது மிக எளிதாகும் என்று கல்வி மந்திரி குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:-

தமிழையும் இந்த நாட்டின் தேசிய மொழியாக்குவதற்காக வடக்கிலும், கிழக்கிலும், தமிழர்கள் சத்தியாக்கிரக இயக்கம் நடத்துகிறார்கள்.

1959-ல் சிங்களம் மட்டும் அரசாங்க மொழியாக்கப்பட்டது.திருமதி பண்டாரநாயக்கா அரசாங்கத்தின் கீழ் அது தொடர்ந்து அரசகரும மொழியாக இருந்து வரும் சிங்களத்தை, சிங்கள அரசர்கள் 2 ஆயிரம் ஆண்டுகளுக்குமேல் அரசகரும மொழியாக உபயோகித்து வந்திருக்கிறார்கள். எனவே அந்நியரின் ஆட்சியின் கீழ் இருந்து விடுதலை பெற்றபின் நமது நாட்டில் மீண்டும் சிங்களம் அரசகரும மொழியாக்கப்பட்டதில் தவறு எதுவும் இல்லை. திருமதி பண்டாரநாயக்கா அரசாங்கம் பதவிக்கு வந்த பின் தேசிய கல்வித் திட்டம் ஒன்று அமுலுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

இந்தத் திட்டத்தில் எல்லாருக்கும் சம சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டிருக்கிறது.

மேஜர் மொன்டேக் ஜயவிக்கிரமா உட்பட வேறு பலரும் பேசினர்கள்.

இந்தியா பதில் அனுப்பியது

புதுடில்லி

இந்தியாவில் விரும்பத்தகாத நடவடிக்கையில் இறங்கியதாக இரண்டு சீனர்கள் வெளியேற்றப்பட்டதற்கு சீன அரசாங்கம் அனுப்பியிருந்த ஆட்சேபத்துக்கு இந்திய அரசாங்கம் பதில் அனுப்பியிருக்கிறது.

அயர்லாந்தின் திட்டம்

நியூயோர்க், மார்ச் 29

ஐ. நா. வின் செலவுகளைக் குறைப்பதற்காக அயர்லாந்து ஒரு திட்டத்தை சமர்ப்பித்திருக்கிறது.

மாணவரின் அன்பளிப்பு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

செல்வன் ஆர். ஏ. ஜீவரத்தினம், செல்வன் எஸ். பெனடிக்ஸ்ட் ஆகியவர்கள் மதிய உணவாகிய 200க்கு மேற்பட்ட பணிஸ் வாழைப் பழங்களை மன்னர் எம். பி. திரு. வி. அழகக்கோனிடம் வழங்கினர்.

ஊர்காவற்றுறைத் தொண்டர்கள்

ஊர்காவற்றுறையிலிருந்து ஒரு கோஷ்டியினர் நேற்று அதிகாலையில் வந்து மன்னர் சத்தியாக்கிரகத்திற் கலந்து கொண்டார்கள்.

பன்றிவிரிச்சான் ஊர்வலம்

பெரிய, சிறிய பன்றிவிரிச்சான் மக்களும் ஆண் பெண் சிறுவர்களும் பெரிய ஊர்வலமாக மன்னரையடைந்தனர். அவர்களது 10 மைல் தூர ஊர்வலம் மக்களின் ஆன்ம உடல் வலிமைக்கு எடுத்துக்காட்டாக விளங்கியது. தம்முடன் அரிசி, மரக்கறி முதலியவற்றையும் கொண்டுவந்து இவர்கள் சத்தியாக்கிரகத்திற் பங்கு பற்றினர். வங்காலைக் கிரமச் சங்கத் தலைவர். திரு. எஸ். ஜோன் மார்க் மிகப்பெரிய ஊர்வலம் ஒன்றை நடத்தினர். இவர் தலைமையில் வந்த ஊர்வலம் ஏதோ ஒரு கிறிஸ்தவ சமாகமம் போல காட்சியளித்தது.

கென்னடி-குரோமிகோ பேச்சுவார்த்தை

லாவோஸ் நெருக்கடி தீரலாம்

வாஷிங்டன், மார்ச் 29

ஜனாதிபதி கென்னடியும் சோவியத் அயல் நாட்டு மந்திரி குரோமிக்கோவும் சமீபத்தில் சந்தித்துப் பேசியதன் காரணமாக லாவோஸ் நெருக்கடி வொகுவாகக் குறைந்துவிட்டதாகத் தெரிகிறது.

இரு பகுதியினருக்குமிடையே நடைபெற்ற பேச்சு வார்த்தைகள் காரணமாக, லாவோஸ் நெருக்கடி சுமுகமாகத் தீர்ந்து விடும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

'பிராவ்டா' பத்திரிகையில் பிரசுரமாகியிருக்கும் கட்டுரையும் நம்பிக்கையளித்திருக்கிறது.

பிரிட்டிஷ் குறிப்புக்கு ரஷ்யா பதில் தெரிவிப்பதற்கு முன் யு. எஸ். நடவடிக்கை எடுக்காது என்று தான் நம்புவதாகவும், லாவோஸ் நெருக்கடியைச் சமரஸமாகத் தீர்க்கவே ரஷ்யா விரும்புவதாகவும் குரோமிகோ தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

மலிவு விலையில் விஞ்ஞான நூல்கள்

புதுடில்லி, மார்ச் 29

வெளிநாடுகளில் வெளியாகும் விஞ்ஞான, தொழில் நுற்பம் சம்பந்தமான புத்தகங்களை மலிவு விலைகளுக்கு இந்தியாவில் விற்பனை செய்வதற்கான திட்டம் ஒன்றை இந்திய அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

டீன்ரஸ்க் நேருவை சந்திப்பார்

பாங்கொக் மார்ச் 29

பாங்கொக்கில் நடைபெறும் 'சியாட்டோ' நாடுகளின் மந்திரிகள் மகாநாட்டில் கலந்து கொள்ளும் அமெரிக்க வெளி நாட்டு மந்திரி திரு. டீன்ரஸ்க் அமெரிக்கா திரும்பும் வழியில் நாளை புதுடில்லியில். சிறிது தங்கி பிரதமர் நேருவை சந்திப்பார்.

இன்று புறப்படவிருந்த அவர் நாளை வரை தமது பிரயாணத்தைத் தள்ளிவைத்திருக்கிறார்.

ராஜாஜி மனு தொடர்ந்து விசாரணை

சென்னை, மார்ச் 29

இந்தியாவின் கடைசி கவர்னர் ஜெனரலாகப் பணிபுரிந்ததற்ககேத் தனக்குக் கொடுக்கப்படும் பென்ஷன் மீது சென்னை கார்ப்பரேஷன், தொழில்வரி விதித்திருப்பதைத் தடுக்கக் கோரி திரு. ராஜகோபாலாச்சாரியார் சார்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ரிட்மனுவின்மீது சென்ற திங்கட்கிழமை சென்னை ஹைக்கோர்ட்டின் நீதிபதி திரு. பி. ராமகிருஷ்ணன் முன்னிலையில் விசாரணை நடைபெற்றது.

ரசிகர்களை மகிழ்விக்க
திரும்பவும் காட்சியளிக்கிறது
கிங்ஸ்லி (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

இணைபிரியா இதயம் உள்ள சகோதரர்கள் நாங்கள். அதனுல் அண்ணன் தங்கையாகிய நாங்கள் இந்த அவனிக்கே புதியவர்கள்.

ஏன் அகிலத்திற்கே புதுமையானவர்கள். நாங்கள் கண்ணியம், இலட்சியம், தன்னடக்கம், பண்பாடு போன்ற இன்னும் நல்ல வழிகளைக் கடைப்பிடித்தோம்.

.....எனவே

பழசப்பழக பாலும் புளிக்கும், பருகப் பருக தேனும் திகட்டும். இனிக்கும் நிலவும் இதயத்தை மயக்கும். தென்றலும் கூட சில போது கசந்து விடுவதுஉண்டு.....

ஆனுல் மலை அசைந்தாலும் நிலை அசையாது, சுகம் நாடாது, சுதந்திரம் தேடாது வாழ்க்கையில் போராடினேன்.....

ஏன்?

எல்லாம் என் தங்கையின் நல்வாழ்விற்காக. கடைசியில் கண்டதென்ன?

பிரமை தட்டும் புயல் வாழ்வில் சிக்கிய எங்கள் உள்ளமுருக்கும் வரலாற்றை வந்து பாருங்கள்.....

புதுமை விரும்பிகள்

எம். ஜீ. ராமச்சந்திரன்
பி. வி. நரசிம்மபாரதி,
பி. எஸ். கோவிந்தன்

ஈ. வி. சரோஜா
மாதுரிதேவி, வி. சுசீலா
நடித்த

அசோகா பிக்சர்ஸ்
என் தங்கை
டைரக்ஷன்:CH.நாராயணமூர்த்தி & M.K.R.நம்பியார்
கதை,வசனம்: வில்லன்:T.S.நடராஜன் ஸ்டூடியோ:நியூடோன்
அசோகா பிக்சர்ஸ், 18, லஸ் அவன்யூ, மதராஸ்.4

இப்பொழுது திரையிடப்படுகிறது!
மனோகரா (யாழ்ப்பாணம்)
சியாமளா
தியாகராஜபாகவதர் எஸ். வரலட்சுமி நடித்தது.
மாலை 6-30 இரவு 9-30
சனி, ஞாயிறு 2-30 மெற்னி

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இலலத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 30-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.